# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 25 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2019.10.31 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தம்)

***1988 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நிதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

***சட்டப்பயன்பற்றிய கூற்று***

***வாசகம் 2*** - இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய மற்றும் சூதாட்டவிதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறானபிரிவின் சட்டப்பயனானது-

(அ) குதிரைப்பந்தயப் பணயக்காரர் தொழிலின் அல்லது சூதாட்டத் தொழிலின் முழுமொத்தச் சேகரிப்பின்மீதானஅறவீட்டைப் பதினைந்து சதவீதத்துக்கு அதிகரிப்பதாகும்;

(ஆ) ஒரு சூதாட்டத் தொழிலிடத்தினுள் நுழைகின்ற எவரேனும் இலங்கைப் பிரசையிடமிருந்து ஒரு கசினோ நுழைவுஅறவீட்டைச் சேகரிப்பதற்கு ஏற்பாடு செய்வதாகும்;

(இ) கசினோ நுழைவுஅறவீட்டைக் கொடுப்பனவுசெய்வதற்கும் சேகரிப்பதற்குமான முறைக்காகவும் நடவடிக்கைமுறைக்காகவும் ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 3*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது

(அ) முழுமொத்தச் சேகரிப்பின்மீதானஅறவீட்டுக்கும் கசினோநுழைவு அறவீட்டுக்கும் அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்புடைமையை நீடிப்பதாகும்;

(ஆ) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகளின் ஏற்புடைமையை முதன்மைச் சட்டவாக்கத்துக்கு நீடிப்பதாகும்.

***வாசகம் 4*** - இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச்சட்டவாக்கத்தின் 4(5) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனைவரவுவரிச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகளின் ஏற்புடைமைக்காக ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 5*** - இவ்வாசகம், ''இலங்கைப் பிரசை''என்ற சொல்லமைப்பின் பதத்துக்காகப் புதிய வரைவிலக்கணமொன்றை உட்புகுத்துவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

***வாசகம் 6*** - இவ்வாசகம், 2019, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டுக்காகவும் விதிக்கப்படற்பாலனவான அறவீடுகள் தொடர்பிலான இயைபான தொகைகளை உள்ளடக்குவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையின் பாகம் II ஐ திருத்துவதாகும்.

ச.வ.ஒ. 10/2019

**1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2015 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''ஐந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று அல்லது'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''ஐந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்கு பத்து சதவீதத்திலான அறவீடு ஒன்று'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''ஆனால் 2019 ஒற்றோபர் 1 ஆந்தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்கு பத்து சதவீதத்திலான அறவீடு ஒன்று; அல்லது'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம்.

(3) அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்துவதன் மூலமும் –

"(இ) 2019, ஒற்றோபர் 1 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்கு பதினைந்து சதவீதத்திலான அறவீடு ஒன்று,"

(4) அப்பிரிவின் (1அஅ) என்னும் உட்பிரிவில் "2015, சனவரி 1 ஆந் தேதி என்பதிலிருந்து தொடங்கி சேகரித்தல் வேண்டும்" என்பது வரையான சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் –

"(1அஅ) இலங்கையில் சூதாட்ட தொழிலை கொண்டு நடாத்துகின்ற ஆள் ஒவ்வொருவரும் (இதனகத்துப் பின்னர் "கெசினோ நுழைவு அறவீடு" எனக்குறிப்பீடு செய்யப்படும்):-

(அ) 2015, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2019, ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னர் முடிவடைகின்றதுமான ஏதேனும் இயைபான காலாண்டிற்கு சூதாட்டத் தொழில் இடத்தில் நுழைகின்ற எவரேனும் ஆளிடமிருந்து அமெரிக்க டொலர்கள் நூறு அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் மாற்றத்தகு வெளிநாட்டு நாணயத்தை அல்லது இலங்கை நாணயத்தை விதிப்பனவு ஒன்றாகச் சேகரித்தல் வேண்டும்;

(ஆ) 2019, ஒற்றோபர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலாண்டிற்கு

சூதாட்டத் தொழிலிடத்தில் நுழைகின்ற எவரேனும் இலங்கைப் பிரசையிடமிருந்து அமெரிக்க டொலர்கள் ஐம்பது அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் மாற்றத்தகு வெளிநாட்டு நாணயத்தை அல்லது இலங்கை நாணயத்தை விதிப்பனவு ஒன்றாக சேகரித்தல் வேண்டும்,

அத்துடன் இப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆணையாளர் தலைமையதிபதிக்கு அவ்வாறு சேகரிக்கப்பட்ட அத்தகைய கெசினோ நுழைவு அறவீட்டை செலுத்துதல் வேண்டும்.''

(5) அப்பிரிவின் (1ஆ) என்னும் உட்பிரிவில் :-

(அ) ''(1அ) மற்றும் (1அஅ)ஆம் உட்பிரிவின்கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகியுள்ள ஒவ்வொரு ஆளும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "உட்பிரிவு (1அ) வின் கீழ் அறவீட்டைச் செலுத்துவதற்கு ஆளாகியுள்ள ஒவ்வொரு ஆளும் மற்றும் (1அஅ) என்னும் உட்பிரிவின்கீழ் அறவீட்டைச் சேகரிப்பதற்கும் செலுத்துவதற்கும் ஆளாகியுள்ள ஒவ்வொரு ஆளும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "அறவீடுகளை அனுப்புதல் வேண்டும்"; என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அறவீடுகளை ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்துதல் வேண்டும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(6) அப்பிரிவின் (1இ) என்னும் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :-

"(1இ) (அ) இப்பிரிவின் உட்பிரிவுகள் (1), (1அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட விதிப்பனவைச் செலுத்து வதற்கும் மற்றும் இப்பிரிவின் (1அஅ) உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கெசினோ நுழைவு அறவீட்டைச் சேகரித்து அத்துடன் செலுத்துவதற்கு ஆளாகியுள்ள ஆள் எவரும் விடயத்திற்கேற்ப அத்தகைய அறவீடுகளை செலுத்துவதற்கு அல்லது சேகரிப்பதற்கு தவறியுள்ளவிடத்து, ஏற்புடையற்பாலனவாறான 4 ஆம் பிரிவின் (2), (3), (4), (5), (5அ) மற்றும் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய தவறுகை தொடர்பில் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

(ஆ) உட்பிரிவு (1அஅ) என்பதன்கீழ் விதிப்பனவைச் செலுத்துதல்மற்றும் சேகரித்தல் தொடர்பான முறை மற்றும் நடவடிக்கைமுறை அமைச்சரினால் விதித்துரைக்கப்படலாம்."

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும்:-

"(2) இரண்டாம் பிரிவின் (1), (1அ) என்னும் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட அறவீட்டை செலுத்துவதற்கு அத்துடன் (1அஅ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கெசினோ நுழைவு அறவீட்டை சேகரித்து, செலுத்துவதற்கு ஆளாகியுள்ள எவரேனும் ஆள்-

(அ) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் அப்பிரிவின் (1), (1அ) மற்றும் (1அஅ) என்னும் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட முறையே விதிப்பனவின் ஏதேனும் தவணைக் கொடுப்பனவை அல்லது அதன் பாகத்தை அல்லது மொத்த சேகரிப்பின்மீதான விதிப்பனவை அல்லது அதன் பாகத்தை செலுத்துவதற்கு அல்லது கெசினோ நுழைவு அறவீட்டை சேகரித்து செலுத்துவதற்கு தவறுகின்றவிடத்து; அல்லது

(ஆ) ஏதேனும் காலப்பகுதிக்கு உதவி ஆணையாளரினால் மதிப்பிடப்படுவதும் மற்றும் வரி மதிப்பீட்டு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப் படுவதுமான அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் சேகரிப்பின் மீதான விதிப்பனவு அல்லது அதன் பாகத்தினை செலுத்துவதற்கு தவறுகின்ற விடத்து,

விதிப்பனவின் அத்தகைய தவணைக் கொடுப்பனவு அல்லது அதன் பாகம் அல்லது மொத்தச் சேகரிப்பின் மீதான விதிப்பனவு அல்லது அதன் பாகம் அல்லது கெசினோ நுழைவு அறவீடு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தவணை தவறுகையில் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆட்கள் தவணை தவறியவர் ஒருவராக இருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் :-

(அ) "ஏதேனும் தவணைக் கட்டணமாவது" தவணை தவறியதாகவுள்ளவிடத்து, அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக 2 ஆம் பிரிவின் (1), (1அ) மற்றும் (1அஅ) என்னும் பிரிவுகளில்

குறிப்பீடுசெய்யப்பட்ட முறையே ''ஏதேனும் தவணைக்கட்டணம் அல்லது அதன் பாகம் அல்லது மொத்த சேகரிப்பின் மீதான விதிப்பனவு அல்லது அதன் பாகம் அல்லது கெசினோ நுழைவு அறவீடு, தவணை தவறியதாகவுள்ளவிடத்து அத்துடன் -'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் ''செலுத்தப்படற்பாலதான தவணைக் கட்டணமொன்று தொடர்பிலானதாக இருக்குமிடத்து'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''செலுத்தப்படற்பாலதான 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதிப்பனவின் தவணைக்கட்டணமொன்று தொடர்பிலானதாக இருக்குமிடத்து''. என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் ''செலுத்தப்படற்பாலதான தவணைக் கட்டணமொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து,'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''செலுத்தப்படற்பாலதான 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின் கீழான விதிப்பனவின் தவணை கட்டணமொன்று தொடர்பிலானதாகவிருக்குமிடத்து,'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்பு வாசகத்தை உடனடுத்தும் பின்வரும் புதிய பந்தியினை உட்புகுத்தவதன் மூலமும்:-

''(இ) தவணை தவறியமை (2)ஆம் பிரிவின் (1அ) மற்றும் (1அஅ) என்னும் உட்பிரிவுகளின் கீழ் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவுகள் தொடர்பிலானதாகவிருக்கின்றது தவணை தவறியவர் தவணை தவறிய விதிப்பனவிற்கு மேலதிகமாகப் பின்வருவனவற்றை செலுத்துதல் வேண்டும்-

(i) அத்தகைய விதிப்பனவின் பத்து சதவீதத்துக்குச் சமமானவொரு பணத் தொகையினதான தண்டம்;

(ii) அத்தகைய விதிப்பனவு தவணை தவறியதாக இருப்பதிலிருந்து முப்பது நாட்கள் காலாவதியாக முன்னர் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அது தவணை தவறுகையில் இருக்கும் போது, மேலும் ஒவ்வொரு முப்பது நாட்கள் அல்லது அதன் பாகம் தொடர்பாக தவணை தவறுகையில் விதிப்பனவின் பத்து சதவீதத்திற்கு சமமானவொரு பணத்தொகையினதான மேலதிக தண்டம் ஒன்று

ஆயினும், இப்பந்தியின்கீழ் தண்டம் என்றவகையில் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகையானது தவணை தவறியுள்ள விதிப்பனவின் ஐம்பது சதவீதத்திற்கு விஞ்சுதல் ஆகாது.";

(4) அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவில் அத்தகைய "தண்டத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விடயத்திற்கேற்ப 2ஆம் பிரிவின் (1), (1அ) மற்றும் (1அஅ) என்னும் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட முறையே விதிப்பனவின் ஏதேனும் தவணைக்கட்டணம் அல்லது அதன் பாகம் அல்லது மொத்த சேகரிப்பின் மீதான விதிப்பனவு அல்லது அதன் பாகம் அல்லது "கெசினோ நுழைவு அறவீடு அத்தகைய தண்டத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(5) 2015ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட (6)ஆம் உட்பிரிவினை நீக்குவதன் மூலமும்.

(6) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(5அ) இப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக, நிர்வாக ஏற்பாடுகள், பதிவேடுகளை வைத்திருத்தல் மற்றும் தகவல் சேகரித்தல், வரிமதிப்பீடுகள், ஆட்சேபனை மற்றும் மேன்முறையீடுகள், வரிக்கான பொறுப்பு மற்றும் வரிக்கொடுப்பனவு, வட்டி, வரி அறவீடு, தண்டங்கள், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பொருள்கோடல் தொடர்பாக முறையே 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் தேதி அன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்காக 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ix, x, xii, xiii, xiv, xv, xvi, xvii, xviii, xix, மற்றும் xx ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், முறையே இச் சட்டத்தின் கீழான நிர்வாக ஏற்பாடுகள், பதிவேடுகளை வைத்திருத்தல் மற்றும் தகவல் சேகரிப்பு, வரிமதிப்பீடுகள், ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகள், வரிக்கான விடுதலை மற்றும் வரிக் கொடுப்பனவு, வட்டி, வரி அறவீடு, தண்டங்கள், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் பொருள்கோடல் என்பவற்றுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 38ஆம் பிரிவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 214 அல்லது 215 ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "மொத்த விற்பனை வரவு வரியின் 42 அல்லது 43 ஆம் பிரிவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 209 ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "மொத்தவிற்பனை வரவு வரிச் சட்டத்தின் 57 ஆம் பிரிவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 209 ஆம் பிரிவு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "மொத்தவிற்பனை வரவு வரிச் சட்டத்தின் 57ஆம் பிரிவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவானது, "ஆணையாளர் தலைமையதிபதி" மற்றும் "பிரதி ஆணையாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"இலங்கைப் பிரசை" என்பது (349ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின்கீழ் இலங்கை பிரசாவுரிமை அந்தஸ்தைக் கொண்டுள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்.

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையினைத் திருத்துதல்.

**6**. 2015 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டத்திற்கான அட்டவணை அதற்கான பாகம் II இனை நீக்குவதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

“ பாகம் II

இதற்கான I ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வோராண்டுக்கும் குதிரைப் பந்தயப் பணயத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவுத் தொகையானது, இதற்கான II ஆம் நிரையில் நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட தொகைக்குச் சமமானதாகவிருத்தல் வேண்டும்.

| நிரை I | நிரை II |
|---|---|
| ஆண்டு | விதிப்பனவுத்தொகை |
| 1. 1988, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2001 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டும். | ஒரு மில்லியன் ரூபா |
| 2. 2001, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2002, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டும். | இருபத்தைந்து மில்லியன் ரூபா |
| 3. 2002, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2005, ஏப்பிறல் 1ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டும். | |
| (i) குதிரைப் பந்தயப் பணயத் தொழிலை கொண்டு நடாத்துவதற்காக (ருட்ஜினோ விளையாடுதல் தவிர). | பன்னிரெண்டு மில்லியன் ரூபா |
| (ii) ருட்ஜினோ விளையாடுதலை மட்டும் தொழிலாக கொண்டு நடாத்துவதற்காக. | ஐந்து இலட்சம் ரூபா |

| | |
|---|---|
| 4. 2005, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு ஆண்டிற்கும் ருட்ஜினோ விளையாடுதல் உள்ளடங்கலாக குதிரைப் பந்தயப் பணயத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக. | ஐம்பது மில்லியன் ரூபா |
| 5. 2013, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு ஆண்டிற்கும் ருட்ஜினோ விளையாடுதல் உட்பட குதிரைப் பந்தயப் பணயத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக. | நூறு மில்லியன் ரூபா |
| 6. 2015, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2019, ஒற்றோபர் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு ஆண்டிற்கும் ருட்ஜினோ விளையாடுதல் உட்பட குதிரைப் பந்தயப் பணயத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக. | இருநூறு மில்லியன் ரூபா |
| 7. 2019, ஒற்றோபர் 1ஆந் தேதிக்கு அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு ஆண்டிற்கும்- | |
| (i) (ருட்ஜினோ மட்டும் விளையாடுதல் என்னும் தொழிலைத் தவிர வேறு) குதிரைப் பந்தயப் பணயத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக. | நானூறு மில்லியன் ரூபா |

| | | |
|---|---|---|
| (ii) | ருட்ஜினோ மட்டும் விளையாடுதல் என்னும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக. | ஒரு மில்லியன் ரூபா.”. |

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*